

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 06.05.2026

# மக்களுக்கு உண்மையாக இருந்தார்!

திராவிட முன்னேற்றக் கழகம் அடையாத வெற்றியும் இல்லை. சந்திக்காத தோல்வியும் இல்லை. வெற்றி கண்டு ஆடியதும் இல்லை. தோல்வியால் துவண்டதும் இல்லை. வெற்றிகளை மகுடங்களாகக் கருதியது இல்லை. மக்களுக்குக் கடமை செய்யும் வாய்ப்பாகவே கருதியது.

**‘பதவி தோளில் கிடக்கும் துண்டைப் போல. கொள்கை என்பது கட்டி இருக்கும் வேட்டியைப் போல’ என்றுதான் தலைவர் கலைஞர் அவர்கள் செயல்பட்டார்கள். அப்படித்தான் கற்பித்தார்கள். பதவியா, கொள்கையா என்றபோது கொள்கையைக் காக்க பதவியையும் தூக்கி எறிந்தவர்தான் தலைவர் கலைஞர் அவர்கள். ‘தலையா, தலைப்பாகையா என்றால் தலையைக் காக்கும் இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்’ என்றார் தலைவர் கலைஞர் அவர்கள்.**

கொள்கைக்காக இயக்கம் உருவாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள், அக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக ஆட்சி அதிகாரத்துக்கு வர வேண்டும் என்றுதான் இயக்கத்தை அரசியல் கட்சியாக மாற்றினார்கள். ஆட்சி என்பது அதிகாரத்தைச் சுவைப்பதற்காக அல்ல, அன்னைத் தமிழினத்தைக் காப்பதற்காக, தனிப்பெரும் தேசிய இனமாம் தமிழினத்தின் உரிமையை நிலைநாட்டுவதற்காக, தமிழ் நல்லுலகை அனைத்து வகையிலும் மேம்படுத்துவதற்காக என்றுதான் பேரறிஞர் அண்ணாவும், தலைவர் கலைஞரும் பாதை போட்டுத் தந்தார்கள். அத்தகைய உயிரோட்ட உணர்வையே கட்சிக்கும் ஆட்சிக்கும் இலக்கணமாக ஆக்கித் தந்தார் திராவிட நாயகன் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.

2018 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் நிறைவுற்ற பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்ற மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள், 2019, 2024 ஆகிய இரண்டு நாடாளுமன்றப் பொதுத் தேர்தலிலும் முழுமையான வெற்றியைக் குவித்து இந்தியாவின் தனிப்பெரும் கட்சியாக கழகத்தை உயர்த்தினார்கள். இன்றைக்கு சமூகநீதி, மாநில சுயாட்சி, கூட்டாட்சித் தத்துவம், மதச்சார்பின்மை, மகளிர் உரிமைகள் ஆகிய கொள்கைகளை ஒட்டுமொத்த இந்தியாவுக்குமான கொள்கையாக ஆக்கிய பெரும் கடமையை திராவிட முன்னேற்றக் கழகம் செய்ய, அவர் பெற்றுத் தந்த பெருவெற்றியே காரணம் ஆகும். ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க.வுக்கு கொள்கைக் கடிவாளம் போட்டுத் தடுக்கும் இயக்கமாக தி.மு.க.வை உயர்த்திக் காட்டினார் தலைவர்.

ஆறாவது முறையாக திராவிட முன்னேற்றக் கழகத்தை 2021 ஆம் ஆண்டு ஆட்சியில் அமர வைத்தார் தலைவர் அவர்கள். பதவிக்கு வந்த நாள் முதல் தினந்தோறும் திட்டங்களைத் தீட்டிக் கொடுத்தார்கள். ஒவ்வொரு திட்டமும் கோடிக்கணக்கான, இலட்சக்கணக்கான, பல்லாயிரக்கணக்கான மக்களுக்குப் பயனளிக்கும் திட்டமாக அமைந்திருந்தது.

**1.31 கோடி மகளிருக்கு மாதம் தோறும் ஆயிரம் ரூபாயைக் கொடுத்ததும், தினந்தோறும் லட்சக்கணக்கான பெண்கள் கட்டணமில்லாமல் பேருந்துகளில் பயணித்ததும், 21 லட்சம் பள்ளி மாணவ,மாணவியர் காலை உணவு சாப்பிட்டதும், 29 லட்சம் பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கியதும், 10 லட்சம் மாணவர்கள் மடிக்கணினி பெற்றதும், 48 லட்சம் மாணவர்கள் ‘நான் முதல்வன்’ திட்டத்தால் தகுதி பெற்றதும் ... என, எத்தனை திட்டத்தைச் சொல்வது? எதனை விடுவது? எந்தத் தனிமனிதனும் விடுபட்டு விடக்கூடாது என்று பார்த்துப் பார்த்துச் செயல்பட்டார். செய்து கொடுத்தார்.**

அவர் தனக்குத் தானே பல இலக்குகளை வைத்துக் கொண்டு செயல்பட்டார். அவருக்கு யாரும் இலக்கு நிர்ணயிக்கவில்லை. அந்த இலக்குகள் அனைத்திலும் வென்று காட்டினார். இந்தியாவிலேயே தலை சிறந்த, உன்னதமான மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்தினார். தமிழ்நாட்டைப் பார்த்து மற்ற மாநிலத்தவர்கள் பொறாமைப்பட்டார்கள். இன்னும் சொன்னால், திராவிட நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்களின் புகழைப் பார்த்தே பலரும் பொறாமைப்பட்டார்கள்.

**‘உங்களில் ஒருவனாகவே’ வாழ்ந்தார். ஒருவேளை, மக்களோடு மக்களாக இருந்ததுகூட தவறா? தூரமாக, எப்போதாவது பார்க்கும் இடத்தில் இருந்திருக்க வேண்டுமா?**

**வாக்களித்த மக்களுக்கு அவர் மிகமிக உண்மையாக இருந்தார். தனது மனச்சாட்சிக்கு விரோதம் இல்லாமல் செயல்பட்டார். எதிரிகளும் பாராட்டும் வகையில் இருந்தார். எதிர்க்கட்சிகளால் குற்றம் சொல்ல முடியாத அளவுக்குச் செயல்பட்டார். ஆனாலும் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு தமிழ்நாட்டு மக்கள், மீண்டும் ஆட்சி அமைக்கும் அளவுக்கு ஏன் வாக்களிக்கத் தவறினார்கள்?**

“ நம்மால் பயனடைந்தவர்கள், நம்மிடம் நன்றி காட்டுவார்கள் என்று எதிர்பார்க்கக் கூடாது என்பதே என் பொதுவாழ்வில் நான் கற்ற பெரும் பாடம்” என்றார் தலைவர் கலைஞர்.

‘ஏன் வாய்ப்பை மறுத்தீர்கள்?’ என்று கேட்கும் உரிமை கழகத்துக்கு உண்டு. 75 ஆண்டுகள் மக்களுக்காக உழைத்த இயக்கம் இது. ஆறு முறை ஆட்சிக்கு வந்து, இன்று நாம் பார்க்கும் தமிழ்நாட்டை உருவாக்கிய இயக்கம் இது.

**“நான் முதலமைச்சர் ஆவதற்கோ, 30 பேர் அமைச்சர் ஆவதற்கோ அல்ல, தமிழ்நாட்டின் நலனைக் காக்க திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வர வேண்டும்” என்றுதான் ஓரணியில் தமிழ்நாட்டைத் திரட்டினார் தலைவர்.**

**தமிழ்நாட்டின் நலனுக்கும் வளர்ச்சிக்கும் எதிரான பா.ஜ.க., கொத்தடிமை அ.தி.மு.க.வை முன்னிறுத்தி தேர்தலைச் சந்தித்தது. தி.மு.க. மீது நல்லெண்ணம் உள்ள சிறுபான்மை மக்களின் வாக்குகளைப் பிரிப்பதற்காக நடிகர் விஜயை மிரட்டி கட்சி தொடங்க வைத்தது பா.ஜ.க. இத்தகைய சூழலில் தி.மு.க. நீங்கலாக யார் ஆட்சிக்கு வந்தாலும் அது பா.ஜ.க.வின் ஆட்சியாகத் தான் அமையும் என்று அரசியல் களத்தில் தெளிவுபடுத்தி பரப்புரை செய்யப்பட்டது. இந்த நிலையிலும், பச்சைக் கொடிக்கும் பச்சைப்பூச்சிக்கும் வித்தியாசம் தெரியாமல் தமிழ்நாட்டு மக்களில் பெரும்பாலானவர்கள் இருப்பதை உணர்த்தி விட்டது இத்தேர்தல் முடிவுகள்.**

திராவிட முன்னேற்றக் கழகம் தனக்கான வாய்ப்பை இழந்திருக்கலாம். களத்தை அல்ல. என்றும் கழகமே தமிழ்நாட்டு மக்களுக்கு காப்பரண். பயணிப்போம்.



திருச்சி மேற்கு சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கே.என்.நேரு மேற்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வெற்றி பெற்றதற்கான சான்றிதழை பெற்றுக் கொண்டார். உடன் மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன், வழக்கறிஞர் ஓம் பிரகாஷ், வழக்கறிஞர் பாஸ்கர் மற்றும் கழக நிர்வாகிகள் காஜாமலை விஜய், கண்ணன், மணிவண்ண பாரதி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி

# வேட்பாளர்களுக்கு வாக்களித்த வாக்காளர்கள்- உழைப்பை தந்த கழக - கூட்டணிக் கட்சி நிர்வாகிகளுக்கு நன்றி!

## மாவட்டக் கழகச் செயலாளர் கீதாஜீவன் அறிக்கை!

தூத்துக்குடி, மே 6 -

தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் கீதாஜீவன் அறிக்கை வருமாறு:-



நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட கோவில்பட்டி, விளாத்திகுளம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் கழக வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள், செயல்வீரர்கள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியின் நிர்வாகிகள், செயல்வீரர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. வெற்றி வாய்ப்பை இழந்திருந்தாலும், உதயசூரியனுக்கு வாக்களித்த 62,805 வாக்காளப் பெருமக்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கழகத் தலைவர் அவர்கள் வழியில், அரசியல் பொது வாழ்வில் கொள்கை காக்கும் பயணத்தில் நமது கொள்கை என்றும் தோல்வியடையாது. வெற்றி - தோல்வி எதுவானாலும் சமமாகக் கருதி நமது லட்சியப் பயணத்தை தொடருவோம். மக்களுக்காக தொடர்ந்து மக்கள் பணியாற்றுவோம்.

மேலும் இந்த சட்டமன்றத் தேர்தலில் தங்கள் அர்ப்பணிப்பான உழைப்பைத் தந்த தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்ட மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகளுக்கும், ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் 5,872 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று அதற்கான சான்றிதழை அலுவலர்களிடம் பெற்றார். நிகழ்வில் மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். உமரிசங்கர், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஜனகர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிட்டு 8,228 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற ஜீ.வி.மார்க்கண்டேயன் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வெற்றி பெற்ற சான்றிதழை பெற்றார். உடன் ஒன்றியச் செயலாளர்கள் ராதாகிருஷ்ணன், அன்புராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.